# மாவீரர்கள்



நாம்

ஒரு **இலட்சிய விதையை** விதைத்திருக்கின்றோம்

அதற்கு எமது **வீரர்களின் இரத்தத்தைப்** பாய்ச்சி

வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து **விருட்சமாகி** எமது

**மாவீரர்களின் கனவை நனவாக்கும்.**

ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு ஒரு உன்னத இலட்சியம் உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்துவிடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கின்றது ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிவிடுகின்றது.



எமக்கு ஒரு நாடு வேண்டும்
எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்
எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும்
என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே,
மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே
எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும்
எமது நாட்டின் விடுதலையை முரசறையும்
வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.

மாவீரர்கள் காலத்தால்
**சாகாத சிரஞ்சீவிகள், சுதந்திரச்சிற்பிகள்,**
எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற
**வீர மறவர்கள்.**




தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள மாவீரர்களான தியாகிகள், காலங்காலமாக எமது

**இதயக்கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்பையொத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக - மனித மலைகளாக - உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளில் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.

மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக -எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக - அமைந்துவிட்டன.

**சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும்**

எமது மாவீரர்களுக்கு நிகர் எவருமேயில்லை

என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை - அவர்களது *தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்பதுயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள்* இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட- வரலாறு முன்னேறிச் செல்கின்றது.

மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகி ன்றது. உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்த மாவீரர்கள் மகத்தானவர்கள்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில், அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் போதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும்

**சரித்திரத்தைப் படைக்கமுடியும்.**

மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர் களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை சரித்திரமாகி விட்டார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள் தாம் தழுவிக்கொண்ட இலட்சியத்தை தம் உயிரிலும் மேலாக நேசித்தவர்கள். மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக்கொண்டவர்கள். அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.

மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்கதினம் அல்ல


நாம் கண்ணீர் சிந்திக் கவலைகொள்ளும்

சோகதினமும் அல்ல.

இன்றைய நாள்,

**ஒரு தேசிய எழுச்சி தினம்** எமது தேசம் சுதந்திரம்வேண்டி

உறுதி பூணும் **புரட்சித் தினம்.**



மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் திகழ்கிறது.

Tamileelam Archive

விடுதலை என்பது ஒரு அக்கினிப்பிரவேசம்; நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்; தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடுசெய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சிதருகின்றன.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது. அடிமைத்தனத்தின் அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந் தான். அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக்கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத்தாய் அவர்களை அரவணைத்துக் கொண்டாள். ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத் தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம்பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்று வருகிறது. தமிழீழம் என்ற அந்த சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும்.

Tamileelam Archive